**இலங்கை மஹாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக்கம்பனிகள்- 2017**
---------------------------------------------------------------------------------------------------------------

இலங்கை மஹாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும்
எனது கணக்காய்விலிருந்து இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ‘ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன்

நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.
எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மஹாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - அதிகாரசபை

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மஹாவலி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களை ஒன்றிணைத்தல்

(அ) அதிகாரசபையின் பூரண உரித்துடன் கூடிய அதன் 03 துணைக்கம்பனிகளும் ஒன்றிணைக்கப்பட்டு திரட்டிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு கம்பனியின் கலைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் கடன்கொடுத்தோருக்கு கணக்கு தீர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மஹாவலி வென்ஷர் கெப்பிடல் (தனி) கம்பனியின் ரூபா 15,550,577 ஆன சொத்துக்கள் மற்றும் ரூபா 394,657 ஆன பொறுப்புக்களையும் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹாவலி அதிகாரசபையினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களையும் அன் துணைக் கம்பனிகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் பின்பற்றியிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியினதும் மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனியினதும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 3,035,306 தொகை மற்றும் ரூபா 7,313,171 தொகையான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியால் நியமத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஆறு மாதங்களில் முதிர்ச்சியடையும் ரூபா 5,802,607 ஆன நிலையான வைப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) நியமத்தின் 28 ஆம் அத்தியாயத்தின் 28.18 ஆம் பிரிவின் பணிக்கொடை ஒதுக்கீட்டின் போது எதிர்வுகூறப்பட்ட அலகு செலவு வைத்தல் முறைமை அல்லது அதற்குச் சமமான ஏனைய முறைமைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனி மற்றும் மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனியால் ஊழியர்கள் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் சேவைக்காலத்தின் அடிப்படையாக கொண்டு பணிக்கொடை ஒதுக்கீடு இடம்பெற்றிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்டிருந்த பணிக்கொடை ஒதுக்கீடும் முறையே ரூபா 1,609,568 மற்றும் ரூபா 1,216,096 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - அதிகாரசபை

### 2.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 134,578,000 பெறுமதியான விவசாய மற்றும் கால்நடை வளங்கள் இருப்பின் பெறுமதி மதிப்பிடப்பட்ட முறை குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 கணக்கீட்டுக் கொள்கை

அதிகாரசபையினால் மூலதன மானியங்களை கணக்கீடு செய்வது தொடர்பாக கணக்கீட்டு கொள்கையொன்றை அறிமுகப்படுத்தப்படாமையால் மூலதன மானியங்கள் படிப்படியாக பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் மூலதன மானிய இறுதியில் மூலதன மானியக் கணக்கின் மீதி ரூபா 24,404 ஆக இருந்தது.

### 2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் 1984 - 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 67,440,853 கிரயத்திலான 03 காணித் துண்டுகளின் நியாயமான பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதில் 02 துண்டுக் காணி கட்டண கொடுப்பனவு இன்றி வெளித்தரப்பினரால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீராவிய பண்ணை மற்றும் மஹாவலி பீ மற்றும் எச் வலயங்களில் மீளாய்வாண்டின் போது கைவிடப்பட்ட ரூபா 7,305,230 ஆன மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) திரட்டிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வழியில் காசு மீதியினுள் ரூபா 38,251,826 ஆன ஏனைய கிடைக்க வேண்டிய மீதிகள் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) அதிகாரசபைக்கு சொந்தமாக உடவளவ வலயத்திற்குரிய 3 வீடுகள், 2 ஓய்வறைகள், விடுமுறைக் கேந்திரமொன்றும் கட்டிடமொன்றும் காணப்பட்டதுடன் அப்பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 671,503,748 தொகையான நிலையான சொத்துக்களில் பகுதியொன்று ரூபா 180,131,037 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய சொத்துக்கள் கணக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நீராவிய பண்ணையின் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,161,780 பெறுமதியான 24,750 கிலோகிராம் பசளை இருப்பினை இறுதி இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மொரகஹகந்த செயற்திட்டத்திலிருந்தும் ஆற்றங்கரை பாதுகாப்பு அலுவலகத்திலிருந்தும் நீராவிய பண்ணைக்கு 2010 - 2016 காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த 12 மோட்டார் சைக்கிள்கள், 02 மல்டிஷொப்பர் இயந்திரங்கள், பால் போக்குவரத்து செய்யும் லொறியொன்று, 03 உழவு இயந்திரங்கள், 04 கோழி வளர்ப்பு கட்டிடங்கள், 02 இலத்திரனியல் அளவீட்டு உபகரணங்கள், மற்றும் பேலின் மெஷின் என்பன முறையாக கையேற்பதற்கும் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) விக்டோரியா வலயத்தின் 7,588 நூலகப் புத்தங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 12,620,622 ஆன நிலுவை வாடகை வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்த 2015 ஆம் ஆண்டில் நிலுவை வாடகை வருமானமான ரூபா 20,960,226 தொகை மீளாய்வாண்டின் போது சீராக்கும் போது அவ்வருமானம் திரண்ட நட்டத்திற்கு தவறாக செலவு வைக்கப்பட்டு கிடைக்க வேண்டிய வாடகைக் கணக்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் திரண்ட நட்டம் மற்றும் கிடைக்க வேண்டிய வாடகை கணக்கு ரூபா 41,920,452 ஆலும் முறையே குறைத்தும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மஹாவலி பீ வலயத்தின் காணிகளிலிருந்து கம்பனியொன்றனால் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 75,941 கியூப் மணலுக்காக கிடைக்க வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணமான ரூபா 37,970,500 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,602,908 ஆக சேமிப்பு வைப்புக்கள், ரூபா 727,481 ஆன நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 1,000,000 ஆன குறுங்கால வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) கடன் முன்மொழிவு நடைமுறைக்காக 2006 ஆம் ஆண்டின் போது திறைசேரியிடமிருந்து கிடைத்த லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியின் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 50,000,000 பணம் மற்றும் அதற்குரிய ரூபா 16,196,761 ஆன வட்டித் தொகை என்பன அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமானத்தேய்வு மற்றும் மஹாவலி கால்நடை வளங்கள் கம்பனியின் முதலீடுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 945,474,952 ஆக இருந்ததுடன் பயன்பாட்டு பதிவேடுகளில் அப்பெறுமதி ரூபா 915,514,765 என காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 29,960,187 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) வலயங்களுக்கு இடையே சொத்துக்கள் பரிமாற்றத்தின் போது உரிய வலயங்களில் நிலையான சொத்துக்கள் பெறுவனவு மற்றும் வழங்கல் கணக்குகளை ஒன்றிணைக்கும் போது சமப்படுத்தப்பட வேண்டிய போதிலும் வலயங்களிலிருந்து கிடைத்த சொத்துக்கள் ரூபா 409,983,931 எனவும் வலயங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 226,936,487 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 143,047,444 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3.5 தொங்கல் கணக்குகள்

அதிகாரசபைக்குரிய துணைக் கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 14,117,550 ஆன தொங்கல் கணக்கு இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது திரட்டிய நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு விடயம் | விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| முதலீடு - இலங்கை மஹாவலி அதிகாரசபை | மஹாவலி கால்நடை விவசாய முயற்சிகள் கம்பனி | 10,000,000 | பங்குச் சான்றிதழ் |
| | மஹாவலி வென்ச்சர் கெப்பிடல் (தனியார்) கம்பனி | 10,398,000 | |
| | மஹாவலி மதியுரை பணியகம் (தனி) கம்பனி | 64,000 | |
| | இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனி | 15,000 | |
| சொத்துக்கள் | சேமிப்புக் கணக்கு | 2,632,908 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் வங்கி பாஸ் புத்தகம் |
| | நிலையான வைப்புக்கள் | 727,481 | வைப்புச் சான்றிதழ் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் |
| வருமானம் | எச். உடவளவ மற்றும் விக்டோரியா, வலயங்களில் குத்தகை வருமானம் | 518,363,565 | நிலுவை குத்தகை பதிவேடு |

### 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 712,249,000 ஆன கிடைக்க வேண்டிய வாடகை வருமானமாக இருந்ததுடன் அதில் ரூபா 24,776,000 தொகையில் 05 வருடங்களாகவும் ரூபா 10,463,000 தொகையும் 03 ஆண்டுகள் முதல் 05 ஆண்டு காலமொன்று மிகைத்திருந்தது. அதிகாரசபைக்குச் சொந்தமான காணியை குத்தகைக்கு வழங்கியதில் வருமான சேகரிப்பிற்காக நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் குத்தகை வருமானத்தை சேகரிப்பதற்குரிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் செயற்படுத்தப்படாமை நிலுவை வருமானம் வருடாந்தம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வேலை ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 535,226,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,466,000 தொகை 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்சாரம், நீர் மற்றும் சுத்திகரிப்புச் செலவினங்கள் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் அதிகாரசபைக்குரிய கட்டிடங்களை வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 05 தரப்பினரிடமிருந்துது 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 4,030,119 ஆன செலவினம் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு அதிகாரசபைக்குரிய ரூபா 104,394,675 பெறுமதியான 13 கட்டிடங்கள் வெளித்தரப்பினர்களால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக வாடகையொன்றை அறவிடுவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிகாரசபை தவறியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 766,474,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 23,779,000 தொகை 05 ஆண்டுகளை கடந்திருந்தன. அம்மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 9,857,000 ஆன நிறுத்தி வைத்தல் பணத்திற்குரிய ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதை உறுதிப்படுத்தி நிறுத்தி வைத்தல் பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு சொந்தமான கலங்குட்டிய பண்ணையில் 25 ஏக்கர் வேறொரு அமைச்சிற்குரிய கால்நடை வளங்கள் கம்பனிக்கு முறையாக குத்தகைக்கு வழங்கப்படாமல் இருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 10,035,000 ஆக இருந்தது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2013 இன் 17 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் திருத்திய 10 (ஆ) ஆம் பிரிவு | 12 மாத கால எல்லைக்காக பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூபா 12 மில்லியனை விஞ்சுமாயின் சட்டத்தின் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்ய வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் குறித்த வருமான மூலகங்களிலிருந்து முன்னைய ஆண்டின் போது ரூபா 87 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 93 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 104(4) | 12 வாகனங்கள் விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய அறிக்கைகளை கணக்காய்விற்கு வழங்கப்படாதிருந்தமையால் நட்ட அளவு மற்றும் அதற்கு பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை பரீட்சிக்க முடியாதிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 757 | அதிகாரசபையின் 08 வலயங்களில் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனக் கைதவிர்ப்பினால் கிடைக்கும் வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது வாகன கைத்தவிர்ப்பிலிருந்து கிடைத்த ரூபா 36,521,474 தொகை அங்கீகாரமின்றி அதிகாரசபையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க மற்றும் 2016 மார்ச் 24 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளின் 3.2 ஆம் பந்தி மற்றும் 2.3.3 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த 03 உத்தியோகத்தர்களுக்கு அங்கீகாரமின்றி செயற்திட்டத்திலிருந்து சேவை புரிந்த காலத்திற்காக அதிகாரசபையால் ரூபா 4,282,668 ஆன சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | அதிகாரசபையின் நிதி செயற்பணிக் கோவையின் 1.5.1 ஆம் பிரிவு மற்றும் 2012 மார்ச் 15 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | முற்பணம் பெறப்பட்ட பணி முடிவடைந்து 07 நாட்களுக்குள் முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 10 வலயங்கள் மற்றும் இரண்டு பிரிவுகளுக்குரிய ஓராண்டிற்கு மேற்பட்ட தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 156,851,005 ஆன வழங்கல் முற்பணமாக இருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட திரட்டிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தொகுதியினதும் அதிகாரசபையினதும் நிதி விளைவுகள் முறையே 437,478,000 மற்றும் ரூபா 433,846,000 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை முறையே ரூபா 34,600,000 மற்றும் ரூபா 37,851,000 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் முறையே ரூபா 402,878,000 தொகை மற்றும் ரூபா 395,995,000 பற்றாக்குறையில் அதிகரிப்பொன்றைக் காட்டியது. அதிகாரசபையின் செலவினம் ரூபா 337,305,000 ஆல் அதிகரிப்பு பற்றாக்குறையில் அதிகரிப்பதற்கு அடிப்படையாக காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 05 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டில் ரூபா 350,271,000 ஆகக் காணப்பட்ட பற்றாக்குறை 2013, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் குறைவடைந்து 2014 ஆம் ஆண்டின் போது அதிகரித்திருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமனத்தேய்வு மற்றும் வரி என்பவற்றைக் மீளச் சீராக்கம் செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,876,561,000 ஆகக் காணப்பட்ட அதிகாரசபையின் பங்களிப்பு 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் குறைவடைந்து காணப்பட்டது.

### 3.2 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

வெளி நிறுவனங்களாலும், நபர்களினாலும் வீடுகளின் உரித்தை மீள பெற்றுக் கொள்வதற்கும் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமை தொடர்பில் அதிகாரசபைக்கு எதிராக 18 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அதன் நிதி கடப்பாடு ரூபா 43.775 மில்லியனாக இருந்தது.

### 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமான சேகரிப்பின் போது காணப்படும் குறைபாடுகள் காரணமாக அரசிறை பெறுவனவுகள் மற்றும் வீடு / காணி வருமானம் 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 203,347,000 குறைவாக கிடைத்திருந்தது.

(ஆ) மக்கள் கிராமங்களை புனரமைப்புச் செய்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு செலவினம் 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ரூபா 330,300,000 ஆல் அதிகரித்திருந்ததுடன். 2016/2017 ஆம் ஆண்டுகளின் போது ''பீ'' வலயத்தின் ஒன்றினைந்த அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்படுத்தியமை இதற்கு காரணங்களாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பொது முயற்சிகளின் வியாபார நடவடிக்கை குறுங்கால மற்றும் நீண்டகால நோக்குடன் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய் போதிலும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது மூன்றாண்டு காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் உத்தேச இலக்கை நோக்கி அடையக்கூடி வகையில் வியாபார தொழிற்பாட்டு பணிப்பாளர் சபையின் பூரண பொறுப்பாக இருந்த போதிலும் இலங்கை மஹாவலி அதிகாரசபையினால் அதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றலுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட திருத்திய செயல்நடவடிக்கைத்திட்டம் 2017 திசெம்பர் 21 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அதிகாரசபையின் செயன்முன்னேற்ற அறிக்கை 2018 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாரிய மஹாவலி திட்டத்தின் பிரகாரம் மஹாவலி கங்கையின் 6,900 மில்லியன் கன மீற்றர் அளவில் நீர் மின்சார உற்பத்திக்கும் நீர்ப்பாசன நடவடிக்கைளுக்குமாக நீரினை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பாரிய மஹாவலி திட்டத்தின் பிரகாரம் 13 மஹாவலி வலயங்களில் 365,853 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்ப்பாசன நடவடிக்கைளுக்குமாக நீரினை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 85,252 ஹெக்டேயர் காணிக்கு மாத்திரம் நீர் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மின் உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 11 நீர்த்தேக்கங்களில் 06 நீர்த்தேக்கங்கள் மாத்திரம் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்திருந்தது.

(ஆ) காணி பிரிவினால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்டம், நீர்ப்பாசனம் விவசாய மழை போசிப்பு நடவடிக்கைகளுக்காக முறையே 13,550, 2530 மற்றும் 580 காணி அனுமதிப்பத்திரங்கள் பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முறையே 12,093, 2,032 மற்றும் 426 அனுமதிப்பத்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. வீட்டுத்தோட்டம், நீர்ப்பாசனம், விவசாய மழை போசிப்பு நடவடிக்கைகளுக்காக முறையே 10,260, 3,525 மற்றும் 3,070 மானிய பத்திரங்கள் பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முறையே 8,668, 2,876 மற்றும் 2,568 அனுமதிப்பத்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. வர்த்தக நடவடிக்கைகள், முதலீட்டு செயற்திட்டங்கள் மற்றும் வீட்டு வாடகை அடிப்படையில் ரூபா 216,789,000 ஆன தொகையொன்றை சேகரிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 189,084,000 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் கீழ் செயற்படும் மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளவாறான அடையப்பட்ட செயன்முன்னேற்றம் தொடர்பாக தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) அதிகாரசபையின் 50 சதவீத பங்களிப்பின் அடிப்படையில் மக்கள் கிராமங்களுக்கு கோழிக்குஞ்சுகள் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 3,065,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு 37,716 குஞ்சுகள் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 2,679,000 செலவிடப்பட்டு 29,012 குஞ்சுகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ii) மஹாவலி பால் பண்ணையாளர்களின் 158 கால்நடைகளை காப்புறுதி செய்வதற்காக ரூபா 191,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 36,000 செலவிடப்பட்டு 50 கால்நடைகள் மாத்திரம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

(iii) அழகு மீன்கள் இனவிருத்திக்காக குஞ்சுகளை இனவிருத்தி செய்யும் 20 அலகுகளை தாபிப்பதற்காக ரூபா 1,970,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 474,000 செலவிடப்பட்டு 8 அலகுகள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வியாபார அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக காணி வழங்கல்

---

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 வலயங்களின் தகவல்களின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்ட 418 காணிகளில் நீண்டகாலமாக வெற்றிகரமாக வியாபாரங்களை நடாத்திச் செல்லும் 153 முதலீட்டாளர்கள் இருந்ததுடன் அவர்களுக்கு இடையே 28 முதலீட்டாளர்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 21,194,183 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ii) 158 காணிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்ததுடன் குத்தகைக்கு வழங்கப்பட்ட மொத்தக் காணியில் அது 38 சதவீதமாக இருந்தது. அதில் 38 வியாபாரங்களுக்காக ரூபா 6,891,708 ஆன நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அந்நிலுவை குத்தகையை அறவிடுவதற்கோ அல்லது அதிகாரசபைக்கு மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கைப்பற்றப்பட்ட, அத்துமீறி வியாபாரங்களை மேற்கொள்ளுகின்ற, மூடப்பட்டுள்ள, நிறுத்தப்பட்டுள்ள, வியாபாரங்களை ஆரம்பிக்காத அபிவிருத்தி அடைந்துவரும் 60 வியாபாரங்களில் 20 வியாபாரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை தொகை ரூபா 1,509,893 ஆக இருந்தது.

(iv) டீ மற்றும் பீ வலயங்களில் முதலீட்டு செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட 3,489.19 ஏக்கர் காணியில் 1,334.09 ஏக்கர்கள் அதாவது மொத்தமாக வழங்கப்பட்ட காணியில் 38.23 சதவீதமாக இருந்த போதிலும் அதற்கு காரணங்களை கண்டு பிடித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) ''எல்'' வலயத்திற்குரிய 755 ஏக்கர் அளவிலான பாரிய காணி 30 முதலீட்டாளர்களுக்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும், எவ்வித அபிவிருத்தி வேலைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான பெரிய காணியொன்றில் மரங்களை அகற்றி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணி வழங்கப்பட்டிருந்த போதிலும், முதலீட்டாளர்களின் காணிகளில் இருந்த பயிர்ச்செய்கை காட்டு

யானைகளால் சேதமாக்கப்பட்டிருந்ததாக அறிக்கைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. வியாபாரங்களுக்காக காணி வழங்குவதற்கு முன்னர் பொருத்தமான காணிகள் தெரிவு செய்யப்படாமையால் காட்டு மிருகங்களிடமிருந்து பயிர்ச்செய்கை சேதங்களை தவிர்க்க முடியாதிருந்த காரணத்தினால் காணி வழங்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் பாரிய சுற்றாடல் சேதங்களும் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) வியாபார அபிவிருத்தி பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட கடன் நிகழ்ச்சித்திட்டங்கள்

---

- மஹாவலி சவிய கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அதிகாரசபையினால் கிராம வாசிகளுக்கு கடன் வழங்குவதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொண்ட ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 72,750,000 வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. கடன் வழங்குவதற்கு பயன்படுத்தப்படாத நிதியத்திற்காக சாதாரண சேமிப்பின் வட்டிக்குச் சமமான வட்டியொன்று அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய போதிலும், 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டுகளிலும் எஞ்சிய பண மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 335,850,255 தொகைக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித வட்டியொன்று பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் அம்மீதிகள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அம்மீதிகள் சபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 04 புர்ந்துணர்வு உடன்படிக்கையின் 04 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரசபையின் மூன்று உறுப்பினர்களுக்கு ம்ரூபா 650,000 கடன் வழங்கப்பட்டிருந்தது.

- மக்கள் வங்கியுடன் 2013 சனவரி 07 ஆந் திகதி ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் குடியிருப்பாளர்களுக்கு தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு கடன் வழங்குவதற்காக ‘‘மஹாவலி அருண’’ முன்மொழிவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் கடன்காரர் செலுத்தும் வட்டி மற்றும் வெளியிடப்பட்ட வட்டிக்கு இடையே வேறுபாட்டினை அதிகாரசபை ஏற்றுக்கொள்கின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் 02 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரசபையின் மூன்று ஊழியர்களுக்கு ரூபா 600,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. இங்கு இலக்கிடப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததா அதில் இருந்து உரிய நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதா, கடன் திருப்பிச் செலுத்தலின் செயன் முன்னேற்றம் எவ்வாறு என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- 2015 ஆம் ஆண்டின் போது இலங்கை மஹாவலி அதிகாரசபை பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மஹாவலி திரிய கடன் முன்மொழிவின் கீழ் ஒவ்வொரு வலயங்களிலும் விவசாய அமைப்புக்களின் அங்கத்தவர்கள் வாழ்கைக நிலைமையை மேம்படுத்துவதற்காக 02 வலயங்களுக்கு மாத்திரம் ரூபா 15,435,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 08 வலயங்களில் இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

  அதில் ஒரு வலயமான ‘‘எச்’’ வலயத்தின் விவசாய அமைப்பொன்றின் மூலம் கடன்களுக்கு கூடிய கடன் எல்லையான ரூபா 200,000 ஐ மிகைத்து மூன்று குடியிருப்பாளர்களுக்கு அங்கீகாரமின்றி ரூபா 1,250,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

- அதிகாரசபை, பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வரும் மொரகஹகந்த வலயத்தில் வியாபார கைவிலங்கு கடன் முன்மொழிவு திட்டத்திற்காக 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி மொரகஹகந்த அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து கிடைத்த ரூபா 25 மில்லியனான தொகை அதிகாரசபையினால் உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் நடைமுறைக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது 2017 ஆம் ஆண்டில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அது அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் பிரகாரம் கடன் வழங்கப்படாத பணத்திற்காக சாதாரண சேமிப்புக் கணக்குகளின் வட்டிக்கு சமமான வட்டியொன்று அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிதியத்தின் சேமிப்பு மீதியான ரூபா 6,368,400 இற்காக வட்டியொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலீட்டாளர்களின் முன்மொழிவின் பிரகாரம் மஹாவலி மேல் நீரேந்து பிரதேசத்தின் மஹாவலி கங்கையின் பிரதான கிளை ஆறுகளின் நீர் மற்றும் ஒதுக்குக் காணிகளைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படுகின்ற சிறிய அளவிலான 46 நீர் மின் நிலையங்கள் காணப்பட்ட போதிலும், அதிகாரசபையின் 3(1), 12 மற்றும் 13 ஆம் பிரிவுகள் பிரகாரம் அரசிறையைப் பெற்றுக்கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2013 ஆம் ஆண்டின் போது 3 சிறிய அளவிலான நீர் மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணியில் உடன்படிக்கையின் பிரகாரம் பெயரளவுப் பெறுமதியாக ரூபா 25,737,500 ஆன வாடகையொன்று அறவிடப்பட வேண்டியிருக்கையில் பின்னர் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் பிரகாரம் இத்தொகையில் ரூபா 3,681,600 ஐ அறவிடுவதற்கு அதிகாரசபையில் நோட்டிஸ் அனுப்பியிருந்த போதிலும், இதுவரை அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜாவத்த பிரதேசத்தில் அமைந்துள்ள அதிகாரசபைக்கு உரித்தில்லாத காணிகளில் ரூபா 76,580,000 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அக்காணிகளில் உரித்தினை அதிகாரசபைக்கு கையேற்பதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையால் 05 துணைக் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 439,000,000 ஆன முதலீட்டிற்கான வருடக் கணக்காக எவ்வித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

### 4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி சீ வலயத்தில் அமைந்துள்ள 03 கற்குழிகளிலிருந்து அகற்றப்பட்ட 1943 கியூப் கருங்கற்களுக்காக அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு கியூப்பிற்காக ரூபா 1,000 வீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும், ஒரு கியூப்பிற்கு ரூபா 300 வீதம் அறவிடப்பட்டதன் காரணமாக ரூபா 1,065,750 குறைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தினால் 20934 கியூப்களிற்காக அரசிறை அறவிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையினால் 1943 கியூப் மாத்திரம் அகழ்வு செய்யப்பட்டதாக கருதி கட்டணங்கள் அறவிடப்பட்டமையால் ரூபா 20,206,750 குறைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மஹாவலி பீ வலயத்தின் சிங்கபுர வீடமைப்பு முகாமின் வீடுகளில் மின்சாரப்பட்டியல் நிலுவையாக காணப்பட்டமையால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்ததுடன் நிலுவை மின்சாரப் பட்டியலை செலுத்த வேண்டிய வீட்டு உரிமையாளர்கள் இனங்காணப்பட்டு உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் நீராவிய பண்ணைக்குரிய 26 ஏக்கர் காணி 1989 ஆம் ஆண்டின் போது அநுராதபுரம் காணி பதிவாளர் அலுவலகத்தினால் எல்/4/6/102 ஆம் இலக்க உடன்படிக்கையில் முப்பது வருட காலத்திற்கு மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த இக்குத்தகை வழங்கல் சரி செய்யப்பட்டு அதிகாரசபைக்கு குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 17 வெலிகந்த வலயத்தின் சிங்ஹபுர மற்றும் அசலபுர பிரிவுகளுக்குரிய 589.8 ஏக்கர் அளவிலான 12 காணித்துண்டுகள் வெள்ளை சந்தனச் செய்கை மற்றும் தென்னை செய்கைகளுக்காக முப்பதாண்டு குத்தகைக்கு அடிப்படையில் 12 பேருக்கு வழங்குவதற்கு 2013 யூன் 25 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) எந்நேரமும் யானைகள் நடமாடும் காசன் குளம் மற்றும் மாதுறு ஓயா இடதுபக்க கால்வாய்க்கு அண்மித்த காட்டுப் பிரதேசத்தில் இந்த இடம் அமைந்துள்ளமை 2018 ஆகஸ்ட் 9 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் சுற்றாடல் அதிகாரசபையினதும் வன சீவராசிகள் திணைக்களத்தின் அங்கீகாரம்ள் மற்றும் நியதிகளுக்கு இணங்க செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) வலயத்தின் பௌதீக திட்டமிடலாளர், சுற்றாடல் உத்தியோகத்தர் மற்றும் வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர்களுடன் இணைந்து 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 2137 ஆம் இலக்க காணியின் கீழ் 10 ஹெக்டேயர் நிலத்தில் சந்தனப் பயிர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு வரை அங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் போது மேலும் 40 ஹெக்டேயரில் எவ்வித பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) குத்தகையாளர்களால் பயிர்செய்கைக்காக அதிகாரசபைக்குரிய காசன் குளத்திலும் மாதுறு ஓயா, இடப்புற கால்வாயின் நீரை பயன்படுத்திய போதிலும் 2014 யூலை 17 ஆந் திகதி MASL/DDG/Dev/15 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடுவதற்கோ அல்லது வேறு நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 12 குத்தகை உறுதிகள் வணிக வங்கியொன்றில் அடகுவைக்கப்பட்டு ரூபா 780,000,000 ஆன கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் நீண்டகால குத்தகையின் நிபந்தனைகளின் பிரகாரம் அடகு வைக்கப்பட்ட நாட்கள் முதல் 21 நாட்களுக்குள் அடகு தொடர்பாக அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரியப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(உ) மஹாவலி பீ மற்றும் எல் வலயத்திற்காக 30 மீள் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கள், நிர்மாணம், பொருத்துதல், அதனுடன் அண்மித்த வசதிகளை வழங்குதல், பத்து ஆண்டு காலமான பராமரிப்பு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நியமத்துடனான நீர் வழங்களை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டு ரூபா 80 மில்லியன் பெறுமதியான செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக அதிகாரசபை மற்றும் தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களம் 2015 செப்தம்பர் 11 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) இதற்காக 2015 ஆம் ஆண்டில் பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 80 மில்லியனான நிதி ஏற்பாடு இரண்டு வலயங்களின் இரண்டு செயற்திட்டங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மொத்த கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 மற்றும் பிற்சேர்க்கை 33 இன் பிரகாரம் ரூபா 100 மில்லியன் வரை திறந்த கேள்வி முறைமையின் கீழ் வழங்குனர் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீள் சுத்திகரிக்கப்படக்கூடிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் போன்ற உபகரணங்களை வழங்கள் பொருத்துதல் மற்றும் பராமரிப்பிற்காக நேரடி ஒப்பந்த முறைமையில் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4 மற்றும் 5.4.8 இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய முற்பண பாதுகாப்பு மற்றும் செயலாற்றல் பாதுகாப்பு என்பன பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கை காலம் 2015 நவம்பர் 30 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்த போதிலும் அத்திகதி வரை உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இதற்காக தாமத கட்டணங்கள் அறவிடுவதற்கு முடியுமான வகையில் நிபந்தனைகள் உள்ளடங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வேலை முடிவடைந்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் / இயந்திரகூடம் மற்றும் உபபாகங்கள் தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களத்திடமிருந்து அதிகாரசபையால் கையேற்கப்பட்டு முறையான உடன்படிக்கை மூலம் அதன் நிர்வாக நடவடிக்கைகளை விவசாய அமைப்புக்களுக்கு கையளிக்க வேண்டிய போதிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட இயந்திர கூடம் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(iv) உடன்படிக்கையின் பிரகாரம் மஹாவலி அதிகாரசபையினால் நீரேந்து வளங்களான குழாய் கிணறுகளை நிர்மாணத்தல், தேவையான மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் வழிநடாத்தல் நீர் சுத்திகரிப்பு இயந்திரக் கூடத்திற்காக விவசாய அமைப்பினால் செலவிட நேர்கின்ற மின்சார கட்டணங்கள் ஊழியர் செலவினம் மற்றும் நீர் விற்பனையால் கிடைக்கும் வருமானம் தொடர்பாக அறிக்கையை வைத்துக் கொள்ளல் மற்றும் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களத்தினால் உத்தரவாதத்துடன் கூடிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல், சுத்திகரிக்கப்பட்ட நீரின் நிலைமையை ஒரு மாதத்திற்கு ஒருமுறை உறுதிப்படுத்தி அப்பரிசோதனை அறிக்கையை மாதாந்தம் வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் அத்தியவசிய பராமரிப்பு வேலைகள், சேவை வழங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல் உப பாகங்கள் மற்றும் நீர் வடிகட்டிகள் என்பன 10 ஆண்டு காலம் பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) சிறுநீரக நோயினால் அவதிப்படுகின்ற மஹாவலி மக்களுக்கு தேவையான பிரகாரம் சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக ரூபா 80 மில்லியனான தொகை செலவு செய்யப்பட்டு மூன்றாண்டிற்கும் அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அம் முதலீட்டு தொகையின் நலன்கள் உரிய கிராம மக்களுக்கு கிடைத்துள்ளதா அதன் செயன் முன்னேற்றம் எவ்வாறென்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கு பின்தொடர் நடவடிக்கை அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மணலாறு வலயத்தில் பொருத்தப்பட்டிருந்த 12 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் 03 இயங்காமல் இருந்ததுடன் 09 இயந்திரங்கள் மூலம் நீர் வழங்கப்பட்டிருந்த போதிலும் நீர் பொருத்தமான நிலைமையில் காணப்பட்டதா என மாதாந்தம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. மணலாறு வலயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 18 சுத்திகரிப்பு இயந்திரங்கள் 14 இயந்திர கூடங்கள் செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை.

(ஊ) மஹாவலி எச், சீ மற்றும் எல் வலயங்களிலும் அதிகாரசபையின் ஆரம்ப வேலைகளை செயற்படுத்தும் பராமரிப்பு பிரிவில் காணப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் 247 வீடுகள் முறையாக வெளித்தரப்பினருக்கு வழங்கப்படாமையினால் அதிகாரசபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(எ) மஹாவலி பாதுகாப்பு படையணியிடமுள்ள ரூபா 26,030,780 பெறுமதியான கட்டிடமொன்று 03 பயிற்சி மண்டபங்கள் மற்றும் 24 உத்தியோகத்தர்கள் விடுதிகள் 2012 திசெம்பர் 24 ஆந் திகதி வரையிலும் தற்காலிக அடிப்படையில் கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து எவ்வித கட்டணமொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) காணிகளிலிருந்து குத்தகை அறவிடும் பொறுப்பு பணிப்பாளர் (காணி) மற்றும் பிரதிப் / உதவிப் பணிப்பாளரிற்கு (காணி) கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பொறுப்பினை ஒவ்வொரு உத்தியோகத்திற்கு பொறுப்பான வதிவிட வியாபார முகாமையாளர்களுக்கும் வலயத்தின் உரிய உத்தியோகத்தர்களுக்கு பன்முகப்படுத்தி அவர்களின் கடமை பட்டியல்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வேறு வருமான மூலங்களிலிருந்து உழைக்க கூடிய வருமானம் சேகரிக்கும் பொறுப்பு எந்த உத்தியோகத்திரனது கடமை பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சீ வலயம், எச் வலயம், விக்டோரியா வலயம் பிரதான அலுவலகம் மற்றும் வன, சுற்றாடல் பிரிவினால் மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கும் செயன் முன்றேற்றம் 37 சதவீதத்திலிருந்து 66 சதவீதம் வரையான குறைந்த பெறுமதியொன்றை கொண்டிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மண் அகழ்வுப் பிரதேசங்களை பரிசோதனை

(i) மஹாவலி அதிகாரப் பிரதேசத்திற்குரிய மஹாவலி கங்கையின் புதிய மணல் அகழும் இடங்களை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடங்களை பரிந்துரைப்பதற்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபை, புவிச்சரிதவியல், மற்றும் கணிப்பொருள் பணியகம், வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து நடாத்தப்பட்ட ஒன்றிணைந்த வெளிக்கள பரிசோதனையில் பரிந்துரைக்கப்படாதிருந்த 50 இடங்களுக்காக சீ வலயத்தின் வதிவிட வியாபார முகாமையாளரின் வேண்டுகோளின் பிரகாரம் வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தினால் பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு மணல் அகழ்வு இடம் மெற்றிருந்தது.

(ii) காணி உரிமையாளி என்ற வகையில் அதிகாரசபையால் இது தொடர்பாக முறையான மற்றும் அடிக்கடி பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை காரணமாக அவ்வலயத்தின் 16 மணல் அல்லுமிடங்களில் பேணப்பட்டு செல்லும் போது சுற்றாடல் அதிகார சபை மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தமை கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) மாதமொன்றுக்குரிய காணிப் பயன்பாட்டுக் கட்டணம் மாத்திரம் செலுத்தி 12 மாத காலம் மணல் அகழ்வு இடம்பெற்றிருந்த போதிலும் 2015 அகஸ்ட் 24 ஆ திகதிய பீஎல்/1/1 ஆம் இலக்க மஹாவலி அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எஞ்சிய 11 மாதங்களுக்காக 386 அகர்வு அனுமதிப்பத்திரங்களிலிருந்து அகழப்பட்ட 807,194 கியுப்களுக்காக காணி பயன்பாட்டுக் கட்டணமாக ரூபா 509,861,400 அறவிடுவதற்கு சீ வலயத்தின் வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை, பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் இதனை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க இயலுமை காணப்படுகின்றது.

(ஆ) விக்டோரியா கொத்மலே வலயத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது 3.593 களுத்துறை மாவட்ட செயலகத்தால் ஹெக்டேயர்களான 03 காணிகளில் சுண்ணாம்புக் கல் அகற்றுவதற்கு மூன்று நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அவர்களால் 2013 ஆம் ஆண்டுகள் முதல் 2016 ஆம் ஆண்டு வரை அகற்றப்பட்ட 31,684 கியுப் சுண்ணாம்புக் கற்களிற்காக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு அரசிறை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் 1 கியுப் இற்காக ரூபா 300 வீதம் 3,937,500 தொகை அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,004,580 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. ஒரு குத்தகையாளருக்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை தொகையான ரூபா 3,973,500 இற்காக நோட்டீஸ் அனுப்பியிருந்த போதிலும் கொடுப்பனவு செய்யப்படாதிடிருந்த போதிலும் அதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்சார கம்பி முறைமை நிர்மாணம் மின்சார சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடொன்றாக இருந்த போதிலும் மாதுரு ஓயா மற்றும் 2 மின் நிலையங்களின் இயளலவினை அதிகரிப்பதற்காக புதிய மின் கம்பி முறைமையொன்று முதலீட்டாளர் ஒருவரினால் ரூபா 150,000,000 கிரயத்தில் நிறுவப்பட்டிருந்தது. இச்செலவினம் முதலீட்டாளர் மற்றும் அதிகார சபைக்கு இடையே அரசிறை 65.8 : 34.2 என்ற விகிதத்தில் பகிரப்பட வேண்டுமென அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதிகாரசபைக்கு முதலீட்டாளர்களிடமிருந்து கிடைக்கும் அரசிறை மற்றும் அதிகாரசபையினால் முதலீட்டாளருக்கு செலுத்த வேண்டிய பணத்தை ஈடு செய்வதற்காக மஹாவலி அதிகாரசபை, மின்சார சபை மற்றும் முதலீட்டாளருக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தமொன்றும் மேற்கொள்ளப்பட வேண்டுமென பணிபாளர் சபை தீர்மானித்திருந்தது. குறித்த தரப்பினர் முத்தரப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளாமல் இருந்ததுடன் மேற்குறித்த குழுவின் பரிந்துரையின் பிரகாரம் முதலீட்டாளர் செலவிடப்பட்ட செலவித்தில் ரூபா 51,300,000 அதிகாரசபையினால் செலவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ரூபா 75,000,000 அதிகாரசபைக்கு கிடைக்கும் அரசிறையில் கழித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது தம்புத்தேகம வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலகத்திற்குரிய நீராவிய பண்ணையின் ரூபா 7,347,608 பெறுமதியான 383 விலங்குகள் கால்நடை வளங்கள் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. விலங்குகளின் பெறுமதியை

அறவிடுவதற்காக இருதரப்பினருக்கு இடையே இணக்கப்பாடொன்று இல்லாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரை விலங்குகளின் பெறுமதியை அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் அறவிட வேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தம்புத்தேகம வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலகத்திற்குரிய எப்பாவெல பொஸ்டேட் படிவுடன் கூடிய 17.942 ஹெக்டேயர் அளவிலான காணி 1992 ஏப்ரல் 09 ஆந் திகதி உடன்படிக்கையின் பிரகாரம் 30 ஆண்டு காலப்பகுதிக்காக அரச சுரங்க அகழ்வு மற்றும் கணிப்பொருள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. காணி குத்தகைக்கு வழங்கல் மாகாண காணி ஆணையாளர் ஊடாக இடம் பெற்றிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை வாடகை மாகாண காணி ஆணையாளருக்கு செலுத்தியிருந்ததால் 1992 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை எவ்வித குத்தகைப்பணமும் மஹாவலி அதிகாரசபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை பின்னர் அதிகாரசபை 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இரண்டு சந்தர்ப்பங்களில் கட்டணங்களை அறவிடுவதற்காக லங்கா பொஸ்போட் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டு அகழப்படும் ஒரு கியுப் அபடைட்டிற்காக ரூபா 300 ஆன கட்டணமொன்று அறவிடப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் அகழப்பட்ட 6,011 கியுப்களுக்காக ரூபா 1,809,738 அறவிடப்பட்டிருந்தது.

(ii) கம்பனியால் ஒப்பந்தகாரர்களுக்கும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்திற்கும் கொடுப்பனவு செய்யும் போது அகழப்பட்ட அபடைட் பார அளவினை அடிப்படையாக கொண்டிருந்ததுடன் மஹாவலி அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்யும் போது அபடைட் கியுப் அளவினை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால் அதிகார சபைக்கு நிதி நட்டமொன்று ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(iii) 2015 நவம்பர் 23 ஆந் திகதிய LUS/SYS-H/PP/1-Vol-1-2015 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் உரிய சேவைக் கட்டணங்களை அறவிடுவதற்காக நடைமுறையொன்றும் கூறுவிலை தயாரிக்கப்படும் வரை 01 கியுப் அபடைட்டிற்காக ரூபா 300 வீதம் அறவிடப்பட்டிருந்த போதிலும் மேலே கூறப்பட்டதன் பிரகாரம் சேவைக்கட்டணங்கள் அறவிடுவது தொடர்பாக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 நிதியத்தின் குறைப்பயன்பாடு

2002 ஆம் ஆண்டில் கடன் முன்மொழிவு முறைமையொன்றை செயற்படுத்தும் நோக்கில சுழற்சி நிதியமொன்றை ஏற்படுத்தும் நோக்கில் ரூபா 48 மில்லியன் ஊவா அபிவிருத்தி வங்கியிலும் ரஜரட்ட அபிவிருத்தி வங்கியிலும் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவ்வங்கிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் வைப்புக்களின் பெறுமதி ரூபா 84.5 மில்லியன் ஆக இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் சாதாரண சேமிப்பிற்கான வட்டியினை விட 4 சதவீதமான வட்டியொன்றின் கீழ் இந்நிதியம் நீண்டகாலம் வங்கியில் நிறுத்திவக்கப்பட்டம சிக்கனமற்ற விடயமொன்றாக இருந்தது. மேலும் சுழற்சி நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடு 2018 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 செப்தம்பர் திகதியற்ற MA/Asset/Buid/Gen/01 நிதிப்பிரவின் அறிக்கையின் பிரகாரம் அதிகாரசபையின் 10 வலயங்களுக்குரிய மற்றும் 02 பிரிவுகளுக்குரிய 2017 ஆம் ஆண்டு வரை 1,055 கட்டிடங்கள் வெளித்தர்பினரால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் 551 கட்டிடங்கள் மற்றும் 293 கட்டிடங்கள் விளைவற்ற வகையிலும் பயன்படுத்த முடியாத நிலைமையிலும் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) நீராவிய பண்ணையில் 02 லொறிகள், 03 உழவு இயந்திரங்கள், இழுவை வண்டியொன்று, பவுசரொன்று மற்றும் மோட்டார் சைக்கிளொன்று 15 வீடுகள், 03 கட்டிடங்கள், 12 கோழிக் கூடுகள், 05 பன்றித் தொழுவங்கள், ஆட்டுத் தொழுவமொன்றும் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அச்சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு அல்லது பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பொல்கொல்லவில் அமைந்துள்ள பூகோள தகவல் முறைமை (GIS) பிரிவு 2007 ஆம் ஆண்டின் போது கொத்மலை சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தமையால் பிரிவுக்கு சொந்தமாகக் காணப்பட்ட 02 கணனிகள், மடிக் கணனியொன்று, 02 யூ.பீ.எஸ் உபகரணங்கள், 03 ஜீ.பீ.எஸ் உபகரணங்கள், 03 பிரின்டர்கள், டிஜிட்டல் கமராவொன்று, டிஜிட்டல் காப்பறையொன்று, ஸ்கேனர் ஒன்று என்பன விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) நீராவிய பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட 02 நீர் பம்பி அறைகளுக்கு நீர்பம்பிகள் வழங்கப்படாத காரணத்தினால் பம்பயிறை நடவடிக்கைகளை செயற்படுத்த முடியாமல் காணப்பட்டது.

## 4.7 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் மஹாவலி பாதுகாப்பு படையணிக்கு இணைக்கப்பட்டிருந்த உதவி பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் 44 பாதுகாப்பு காப்பாளர்கள் வெளி அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் விடுவிக்கப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டு வரை அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட ரூபா 49,974,569 சம்பளம் மற்றும் ரூபா 21,571,442 ஆன மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினத்தை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபைக்குரிய 18 வாகனங்கள் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வழங்குவதற்கு வழங்கிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இவ்வாகனங்களின் உள்ளவாறான நிலைமையையும் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே சனாதிபதி செயலகத்திற்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த ஒரு வாகனமொன்று விபத்திற்கு உட்பட்டு திருத்தம் செய்யப்படாமல் 2017 ஏப்ரல் 06 ஆந் திகதி முதல் ஜாவத்த பாதுகாப்பு உப பிரிவில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டு முதல் பல்வேறு செயற்திட்டங்களுக்கு முழுநேரமாக விடுவிக்கப்பட்டிருந்த 09 உத்தியோகத்தர்கள் மற்றும் 09 ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த சம்பளம் ரூபா 17,936,683 மற்றும் வரிசை அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்ட 18 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் செலுத்தப்பட்ட சம்பளம், மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினம் ரூபா 19,106,596 ஆன தொகையை மீள நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.8 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 14 வெற்றிடங்கள் மத்திய முகாமைத்துவ மட்டத்தில் 159 வெற்றிடங்கள் ஆரம்ப மட்டத்தில் 509 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் மற்றும் 195 மிகையான பதவியணியினரொன்றாக இருந்தது. மேலும் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக உட்படாத பதவிகளுக்காக தற்காலிகமாக 83 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பணிப்பாளர் (காணி), பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்), பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் கால்நடை வளங்கள்) பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் ‘‘சீ’’ வலயம், ‘‘பீ’’ வலயம், ஹுருலு வெவ வலயம், ரம்பகன்ஓயா வலயம் மற்றும் ஜீ வலயங்களின் பிரதி வதிவிட வியாபார முகாமையாளர் ஆகிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட அட்சேர்ப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பொருத்தமான உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த அடிப்படையிலும் இரண்டாம் தர அடிப்படையில் அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் உத்தியோகத்தர்களிடமிருந்து நீண்டகாலமாக கிடைக்கும் சேவை மற்றும் உயர்ந்த செயலாற்றலை அடைந்துகொள்வதற்குமுள்ள சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது.

**4.9 வாகனங்கள் பயன்பாடு**

ஆரம்ப வேலை கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவு 2008 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்ட 10 வாகனங்கள் 2010 மார்ச் 09 மற்றும் 2014 சனவரி 22 ஆந் திகதிய ஆரம்ப வேலை கட்டுப்பாட்டு செயற்பாடுகள் பணிப்பாளரின் கடிததங்களின் மூலம் கையளிப்பதற்கும் கேள்வி மூலம் விற்பனை செய்வதற்கு பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் (நிர்வாகம் மற்றும் நிதி) பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் (தொழில்நுட்ப சேவைகள்) அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தது.

**05. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ‘‘நிகழ்ச்சிநிரலின்’’ பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியதுடன், மீளாய்வாண்டில் அதிகாரசபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. அவ்வாறு அறிந்திருக்காததன் காரணமாக தமது விடயப் பரப்பிற்கு உட்படும் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைல்கல்லையும் இலக்குகளை அளவிடுவதற்காக சுட்டிகளையும் இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களையும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 06 மாதங்கள் தாமதித்து 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வாளர் (பணிப்பாளர்) பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப்பதவிக்காக தகைமையுடைய பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

### 6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

#### 6.3.1 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெலிகந்த வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்திற்குரிய வேலை பிரிவினதும் அரலகங்வில விதை பண்ணையின் காவலாளி கூடத்தையும் மலசல கூடத்தையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,922,818 ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பர் 07 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 90 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தக்காலம் 03 சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்பட்டிருந்ததுடன் மூன்றாவது கால நீடிப்பு 2018 மே 22 ஆந் திகதி முதல் 2018 யூன் 2 வரையாக இருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆஅகஸ்ட் 7 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் அதற்காக ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டோ அல்லது தாமதக் கட்டணமான ரூபா 34,610 அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிர்மாணங்களின் போது தளபாடங்கள் மற்றும் அஸ்பஸ்டஸ் ககடிலான கூரையை தயாரிப்பதற்கு பதிலாக கொங்கிரீட் தளமொன்று இடல், மரக்கதவு யன்னல் என்பவற்றிற்கு பதிலாக அலுமினியக் கதவு யன்னல்களை பொருத்துவதற்கு மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் திருத்திய மதிப்பீட்டை அங்கீகரித்துக் கொள்வதற்கு 2018 செப்தம்பர் 30 திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,884,610 உடன்படிக்கை பெறுமதிக்கு றுஹுணுகெத சுற்றுலா விடுதியைச் சுற்றி வேலி மற்றும் பிரதான நுழைவாயிலை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 7 வரையிலும் ரூபா 549,822 செலவிடப்பட்டு சுற்றுலா விடுதியச் சுற்றி வேலி நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அது காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டிருந்தமையால் அழிவடைந்திருந்தது. இப்பிரதேசம் எப்போதும் காட்டு யானைகள் நடமாடுவதால் வேலி நிர்மாணிப்பதற்கு முன்னர் சக்திவாய்ந்த மின்சார வேலி ஒன்று அமைக்கப்படாமல் கம்பி வேலி அமைக்கப்பட்ட காரணத்தினால் செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவினமொன்றாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(இ) தம்புத்தேகம வலயத்தின் ஒப்பந்த கால வேலையை மிகைத்து இருந்த மூன்று ஒப்பந்தங்களின் செயற்பாடுகள் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 18 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த இந்த ஒப்பந்தத்திற்காக கால நீடிப்பினை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்த திகதியில் உள்ளவாறு ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வதற்கு தவறிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,025,776 ஆன தாமதக் கட்டணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செலவின விடயங்களில் 81 சதவீதம் முதல் 38,445 சதவீதம் வரையான வீச்சில் பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டு எல்லையை மிகைத்து உள்ளவாறான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த 04 செயற்பாடுகளுக்காக ரூபா 27,968,000 செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 32,497,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 08 செயற்பாடுகளுக்காக எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக அதிகாரசபையின் ஆண்டறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மின்சார சபையின் மொத்த நீர்மின் உற்பத்தியில் 50 சதவீதம் அளவு மஹாவலி நீர்த்தேக்கத்துடன் அண்மித்தாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நீர் மின்நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதுடன் பொல்கொல்ல, விக்டோரியா மற்றும் கொத்மலை ஆகிய நீர்த்தேங்கங்களின் அணைக்கட்டு மீதான மின் விளக்குகளுக்காகவும் அதிகாரசபையல் இலஙகை மின்சார சபைக்கு மின்சாரக் கட்டணத்தை செலுத்துவது அவதானிக்கப்பட்டது. நீர்த்தேக்கப் பராமரிப்பு மற்றும் மின்சார சபை பயன்படுத்திய நீருக்கான கட்டணமொன்று செலுத்தப்படாமையினால், இப் பிரதான அணைக்கட்டுக்களில் மின்சாரத் தேவையினை இலவசமாக பெற்றுக் கொள்வதற்கு அதிகாரசபையினால் கவனம் செலுத்தவேண்டி இருந்தது.

(ஆ) பொல்கொல்ல, கொத்மலை, போவதென்ன, மாபாகட, மாதுறுஓயா மற்றும் விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பாதுகாக்கப்பட்ட நிலப் பிரதேசத்தில் அனுமதியற்ற 655 குடியிருப்பாளர்கள் வாழ்ந்து வருகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் மீண்டும் குடியேறும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் வருகையைத் தடுப்பதற்கும் அதிகாரசபை தவறியிருந்தது.

(இ) 1992 யூலை 08 மற்றும் 1992 ஒக்தோபர் 14 ஆந் திகதிய நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் திரைப்பட நிலையத் தொகுதியொன்றையும் செயற்பாட்டு இடமொன்றை நிர்மாணிப்பதற்கு மதிப்பீட்டு பெறுமதியில் 6 சதவீதம் அல்லது கூடியது 10 சதவீதத்திற்கு மேற்படாத நீண்டகால குத்தகை சதவீதத்திற்கு உட்பட்டு 50 ஆண்டுகளுக்கு அதிகாரசபையின் திகனயில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத் தொகுதியை வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 1993 மே 21 ஆந் திகதி கம்பனியுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிடத் தொகுதி மற்றும் நிலம் ரூபா 20 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கணக்காய்வின் மதிப்பீட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 28,800,000 மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட 11 வீடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 4,542,500 ஆக இருந்தது. தற்போது இச்சொத்துக்களின் உரித்தினை பெற்றுக் கொள்வதற்காக அதிகாரசபையினால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் இறுதி திர்மானமொன்றை மேற்கொள்வதற்கு தவறியிருந்தது.

(ஈ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தெற்கு அதிவேக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக மண் வழங்கும் போது வளவ வதிவிட விடுதி வியாபார முகாமையாளரால் உரிய திட்டமொன்றின் பிரகாரம் காணி வழங்காமையால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து மண் வெட்டப்பட்டிருந்ததுடன் அளவீட்டு அறிக்கைகளின் பிரகாரம் மண் வெட்டுவதற்காக வழங்கப்பட்டிருந்த இரண்டு இடங்களிலிருந்து வெட்டி அகற்றப்பட்டிருந்த மண்ணின் அளவு 157,719 கியூப்களாக இருந்த போதிலும் 5,000 கியூப் மணலுக்காக மாத்திரம் ரூபா 2,800,000 ஆன காணி பயன்பாட்டுக் கட்டணங்கள் அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது. கூடுதலாக அகற்றப்பட்டிருந்த 152,719 கியூப் மண்ணிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 85,522,640 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இப்பணத்தை அவிடுவதற்காக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் காரணமாக பணம் அறவீடுகள் சந்தேகத்திற்குரியதாக இருந்தது. உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மந்தமான தன்மையில் காணப்பட்டது.

(உ) 2016 ஆம் ஆண்டின் போது விக்டோரியா வலயத்திற்கு கையேற்கப்பட்ட வாட்டர் பீல்ட் நிறுவனத்தின் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்களின் நிலைத்திரு தன்மையை உறுதிப்படுத்துவதற்காக வருடாந்தம் சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை, விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிற்குரிய சொத்துக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | காணி மற்றும் கட்டிடங்களின் பயன்பாடு | வெளித்தரப்பினரால் அதிகாரசபைக்குரிய கடடிடங்கள் வாடகையின்றி பயன்பாட்டிற்கு எடுத்தல் வலயங்களில் கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை மற்றும் கணிய வளங்களுடன் கூடிய காணி முறையாக முகாமை செய்யப்பட்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) | கணக்கீடு | வரி வருமானம் மற்றும் நிலஜவ வருமான சேகரிப்பிற்காக சரியான நடைமுறையொன்று இல்லாமல் இருந்ததுடன் குத்தகை வருமான சேகரிப்பிற்குரிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் செயற்படுத்தியிருக்கவில்லை. |
| (ஈ) | முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும் | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பெறப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | ஒப்பந்தக்காரர்களை தெரிவுசெய்யும் திணைக்கள பெறுகை குழுவிடமிருந்து நிறைவேற்றாமல் பிரதேச பெறுகை குழுவின் மூலம் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் எவ்வித அடிப்படையொன்று இல்லாமல் செயற்பாடுகளை ஒதுக்கப்பட்டிருந்தன. |
| (ஊ) | செயற்திட்ட முகாமைத்துவம் | செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை. |
| (எ) | பதவியணினர் முகாமைத்துவம் | சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 14 வெற்றிடங்கள் மற்றும் ஏனைய பதவியணியில் மிகை பதவியணியினர் 195 காணப்பட்டமை. |
| (ஏ) | வாகனக் கட்டுப்பாடு | வெளித்தரப்பினரிடமுள்ள வாகனங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் வாகனங்கள் தொடர்பான வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை. |